25th July 1962]

திரு. ஜே. மாதா கவுடர் : நீலகிரிக்கு என்ன கண்டிஷன் போட்டிருக்கிறார்கள்? நீலகிரி ரோடுகளுக்குத் தார் போட்டால் அது பிரயோசனம் இல்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா? அல்லது பஞ்சாயத்து யூனியனே தார் போட்டுக் கொள்ளலாம் என்ற முறையில் உத்தரவு போட்டிருக்கிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் அளித்த விடை அது தான். கனம் அங்கத்தினர் கருத்தையொட்டித்தான் விடை அளித்தேன். நீலகிரி ரோடுகளில் தார் போடுவது தான் நல்லது. அங்கு தார் போடாமல் இருந்தால் அது பிரயோசனம் இல்லை. கிராமங்களுக்குத் தார் போட்டுச் செலவு ஆவதை விட அதற்கு என்று அல்லாட் பண்ணிய பணத்தைக் கொண்டு கிராமங்களில் ரோடுகள் போட்டால் பிரயோசனமாக இருக்கும் என்று கருதித் தான் அப்படி முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கிராம ரோடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதனால் அதற்குச் செலவு செய்யக்கூடிய பணத்தை எடுத்துக் கிராம ரோடுகள் போடுவதற்கு செலவு செய்யப்படுகிறது. அந்த முறையில்தான் அந்த அல்லாட்மெண்ட் செலவு செய்யப்படுகிறது. அதனால்தான் நீலகிரியிலுள்ள ரோடுகளுக்குத் தார் போடுவதுதான் நல்லது என்று தோன்றுகிறது. அதனால்தான் அதற்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

சுண்ணாம்புக் கற்கள் (ஏலகிரி மலை)

***660 கேள்வி.—திரு. எம். பி. வடிவேல் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஏலகிரி மலை அடிவாரத்தில் பீங்கான் சாமான்கள் செய்வதற்கேற்றச் சுண்ணாம்புக் கல் கிடைப்பது உண்மையா?

(இ) அதைப் பயன்படுத்தி ஒரு பீங்கான் தொழிற்சாலை வாணியம்பாடியில் துவக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No information is available regarding the occurrence of limestone in Elagiri Hills in Tirupathur taluk of North Arcot District.

(*b*) Does not arise.

வெள்ளைக் களிமண்

***660-எ கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பண்ணுருட்டிக்கு அருகில் அதிக அளவில் வெள்ளைக் களிமண் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

(இ) அதைக் குறைந்த செலவில் வெட்டி எடுக்கப்படுவதும் உண்மையா?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir. An investigation of the white clay deposits near Panruti in South Arcot